1997 மார்ச் 17]

231--

திருக்குறளின்மீது சத்தியம் வாங்கும் முறை

*4873--**திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நீதிமன்றங்களில் பகவத்கீதையை வைத்து சத்தியம் வாங்குவதை தவிர்த்து, திருக்குறளின்மீது சத்தியம் வாங்கும்முறை அறிமுகப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீதிமன்றங்களில் பகவத் கீதையை வைத்து சத்தியம் வாங்குவதைத் தவிர்த்து, திருக்குறளின் மீது சத்தியம் வாங்கும் முறையை அறிமுகப்படுத்த அரசு விரும்பவில்லை.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, தமிழுக்கு முக்கியம் தருகின்ற அரசு. தமிழையே தன்னுடைய உயிராகக் கொண்டவர் நம்முடைய தலைவர். அப்படிப்பட்ட நம்முடைய அரசு காலத்தில், உலகப் பொதுமறை நூலாகிய திருக்குறளை வைத்து சத்தியம் வாங்குகின்ற முறை இனிமேலாவது அறிமுகப்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் கொண்ட தேன்மொழியாம், வள்ளுவப் பெருந்தகை படைத்த திருக்குறள் மத நம்பிக்கைகளுக்கு, மதக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பொது நூலாகும். பொதுவாக வாக்குமூல சத்தியத்தை மத நூலின் பெயரால் எதற்காகப் பெறுகின்றனர் என்றால், மத நூல் என்பது மனிதர்களால் எழுதப்பட்டிருந்தாலும், அது கடவுளால் படைக்கப்பட்டவை என்று கருதப்படுகிறது. அதில் இருக்கின்ற நீதி நெறிகளை மீறினால் கடவுள் தண்டிப்பார் என்ற நம்பிக்கையும் அச்சமும் மக்களிடத்திலே இருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த மத நூலின் பெயரால் சாட்சியமளிக்க அவர்கள் சத்தியம் செய்து கொடுத்தால் உண்மையைச் சொல்வார்கள் என்று நம்பி அந்த முறை புகுத்தப்பட்டிருந்தாலும் அதுவே கண்டிப்பானதல்ல. அதற்குப் பதிலாக

1969-ஆம் ஆண்டு வாக்குறுதிச் சட்டத்தின்கீழ் கடவுள் பெயரால் என்று பொதுவாகவும் எடுக்கலாம் அல்லது உளமார உறுதி கூறுகிறேன் என்றும் வாக்குறுதி அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் *42* ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்திருக்கிறேன். இதுவரையில் பகவத்கீதையின்மீது சத்தியப் பிரமாணம் செய்ததாக எனக்குத் தெரியாது. எந்த ஆதாரத்தோடு மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டார் என்றுகூட எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வியிலேகூட ஒரு அடிப்படை இருக்கிறது. "Criminal Rules of Practice" என்பதின் *44*-வது பிரிவில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. "...The witness shall hold a copy of the Bible in his right hand and shall kiss the book after the following words have been pronounced by the Officer administering the oath:

'...So and so, the evidence you shall give to the Court touching the matter in the question shall be truth, the whole truth, nothing but truth, so help you God.' ". This has been stated in the...... பைபிள் கொடுக்கப்பட்ட காரணத்தினால் சில நீதிபதிகள் பகவத்கீதையையும் பயன்படுத்தியிருக்கலாம்.

முற்பகல் *10-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லுவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல பகவத்கீதையின் பெயரிலோ அல்லது உளமார என்றோ சொல்லாம். எந்த சாட்சியும் கட்டாயமாக பகவத்கீதையின்மீது சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டும் என்று எந்த நீதிமன்றமும் உத்தரவு போடமுடியாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான மூல பதில் திருத்தப்பட்டிருக்கிறது. தங்களுடைய கருத்தின்படி திருத்தப்பட்ட பதில் சரியல்ல என்கிற கருத்து உண்மையாகிறது. "நீதிமன்றங்களில் பகவத்கீதையின் பெயரிலோ அல்லது 'திருக்குறள்' பெயரிலோ உறுதி எடுக்க சட்டத்தில் தற்போது விதிகள் ஏதும் இல்லை".-- இதுதான் துறையால் தரப்பட்ட பதில். ஆனால், அமைச்சர் அவர்கள் படிக்கும்போது நீதிமன்றங்களில்

1997 மார்ச் 17]

பகவத்கீதையைத் தவிர்த்து, திருக்குறளின் பெயராலே உறுதி எடுக்க தற்போது விதி எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார். ஆக, தங்களுடைய கருத்தின்படி திருத்தப்பட்ட பதில் சரியானதாக எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே துறை தயாரித்துக் கொடுத்த பதில்தான் முறையான பதில்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பைபிள் என்ற வார்த்தையை உபயோகித்ததனாலே சில நீதிமன்றங்களிலே பகவத்கீதையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை மையமாக வைத்து மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பார் என்று நான் அனுமானிக்கிறேன், அவ்வளவுதான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட பதில், 'நீதிமன்றங்களில்' பகவத்கீதையைத் தவிர்த்து திருக்குறளின் பெயரால் உறுதி எடுக்க சட்டத்தில் தற்போது விதி ஏதும் இல்லை என்றும், பகவத்கீதையின் பெயரால் உறுதி எடுக்கலாம் என்று விதி இருப்பதாகவும் ஆகிவிடுகிறது. எனவேதான், இந்தக் கருத்தில் விளக்கம் தேவைப்பட்டது. அமைச்சர் அவர்கள் திருத்திக்கொண்டு, அடுத்த கேள்விக்குத் தாங்கள் போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *232*, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

232--

போடிநாயக்கனூரில் சட்டக்கல்லூரி தொடங்குதல்

5490*--திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) போடிநாயக்கனூரில் சட்டக்கல்லூரி தொடங்குவது குறித்து அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,